அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624

அ.எண் : 70/2016
தேதி : 13.04.2016

# சமத்துவ மக்கள் கட்சி நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ அவர்களின் அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாள் வாழ்த்து

*தலைகுனிந்து நின்ற தாழ்த்தப்பட்ட இன மக்கள் தலைநிமிர்ந்து அனைவரோடும் சரிநிகர் சமானமாய் வாழும் நிலை உருவாவதற்கு வித்திட்ட முன்னோடி டாக்டர் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாள் உலகெங்கும் போற்றிக் கொண்டாடப்படுகிறது.*

***'ஒரு லட்சியத்தை மேற்கொள்ளுங்கள் - அதை அடைவதற்காக விடா முயற்சியுடன் உழைத்து முன்னேறுங்கள்',***
***'ஆடுகளைத்தான் கோவில்கள் முன்பாக வெட்டுகிறார்களேயொழிய சிங்கங்களை அல்ல - ஆடுகளாக இருக்க வேண்டாம் சிங்கங்களைப் போல வீறு கொண்டு எழுங்கள்'***
*என்பன போன்ற உத்வேகப் பொன்மொழிகள் மூலம் எழுச்சிமிகு சமுதாயம் ஏற்பட வைத்த ஒப்பற்ற தலைவர் அண்ணல் அம்பேத்கர். அத்தகைய மாமேதையின் பிறந்தநாளில் அவரது போதனைகளை பின்பற்றி சாதி, மத, மொழி, இன, பேதமற்ற சமத்துவ சமுதாயம் தழைத்திட உறுதி ஏற்பதே அவருக்கும் அவரது புகழுக்கும் நாம் சேர்க்கும் பெருமையும், கௌரவமும் ஆகும் என்பதை சமத்துவ மக்கள் கட்சியின் வாயிலாக அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*நன்றி, வணக்கம்*
*உழைப்பவரே உயர்ந்தவர்*
*என்றும் அன்புடன்*

*ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ*
*தலைவர்*